செ.வெ.எண்: 24/ ஜுலை நாள் : 11.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு இழப்பீட்டுத் தொகை வழங்குவது குறித்த மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுக் கூட்டம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (11.07.2017) மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட அளவிலான பயிர் காப்பீடு கண்காணிப்பு குழு தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு இழப்பீட்டுத் தொகை வழங்குவது குறித்த மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் 2016-2017 -ஆம் ஆண்டில் எதிர்பார்த்த அளவு வடகிழக்கு பருவ மழை பெய்யாத காரணத்தினால் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் கடுமையான வறட்சி ஏற்பட்டது. இதன் காரணமாக வேளாண்மைப் பணிகள் முற்றிலுமாக பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் மூலம் மாவட்டந்தோறும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் குறித்து களஆய்வு செய்திட குழு அமைக்கப்பட்டது. இக்குழுவினரின் ஆய்வின் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டம் முழுமையும் 100 சதவீதம் வறட்சியினால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதேவேளையில், பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் நெல் மற்றும் இதர வேளாண் பயிர்களுக்கு 1,17,542 விவசாயிகளுக்கு 1,12,981 ஹெக்டேர் பரப்புக்கு பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. மிளகாய் போன்ற தோட்டக்கலை விவசாயிகளுக்கு 10,044 விவசாயிகளுக்கு 8220 ஹெக்டேர் பரப்பிற்கு பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2016-17 பயிர் காப்பீடு இழப்பீடு தொகையாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு கடன் பெற்ற விவசாயிகளுக்கு ரூ.1.65 கோடியும், கடன் பெறாத விவசாயிகளுக்கு ரூ.353.63 கோடியும் ஆக மொத்தம் ரூ.355.28 கோடி முதல் தவணையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இத்தொகையினை, பயிர்காப்பீடு செய்து வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு சிரமமின்றி சென்றடையும் வகையில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.ஆர்.அரிவாசன், தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவன உதவி மேலாளர் திரு.லெட்சுமணன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.தமிழ்வேந்தன், நபார்டு திட்ட மேலாளர் திரு.மதியழகன், முன்னோடி வங்கி மேலாளர் திரு.சுரேஷ் பாபு உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**